6.4.7 மேலே உள்ள 6.4.6 பந்தியில் குறிப்பிடப்பட்ட அறிக்கையின் பிரகாரம், தற்போது பயன்படுத்தப்படாத தாங்கிகளை பயன்படுத்துவதன் மூலம் நாட்டில் காணப்படும் மொத்த பெற்றோலிய களஞ்சிய இயலளவில் 1.5 மடங்கு களஞ்சிய இயலளவொன்று இந்த மேல் பகுதி எண்ணை தாங்கி தொகுதிக்குரியதாக உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. மேலும் அவ்வறிக்கையின் பிரகாரம்

(அ) மிக சிறிய புனரமைப்பின் பின்னர் பயன்படுத்தக்கூடிய பெரிய எண்ணைய் தாங்கிகள் அளவொன்று காணப்படுவதாகவும்

(ஆ) உலகின் ஆழமான துறைமுகமான திருகோணமலை துறைமுகத்திலிருந்து எரிபொருள் இறக்கப்படுவதுடன் அதற்குத் தேவையான அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகளுடன் 12 இற்கும் மேற்பட்ட தாங்கிகளை பயன்படுத்துவதற்கு சுமார் 6.5 மில்லியன் அமெரிக்க டொலர் செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது. இந்த தாங்கிகளைப் பயன்படுத்தி திருகோ-காணமலைக்கு அருகிலுள்ள மாகாணங்களுக்கு எரிபொருள் விநியோகிப்பதன் மூலம் வருடாந்த போக்குவரத்து செலவுகளில் சுமார் ரூபா 620 மில்லியன் சேமிக்க கூடியதாக இருக்குமெனவும்

(இ) இலங்கை பிரதன கடல் மார்க்கத்திற்கு அருகில் அமைந்துள்ளதால் இவ்வியாபாரத்தை மேற்கொள்வதன் மூலம் இலங்கையில் கப்பல் எரிபொருள் வியாபாரத்தை மிகவும் இலகுவாக மேற்கொள்ள முடியுமெனவும்

(ஈ) திருகோணமலை எரிபொருள்

தாங்கி தொகுதிக்கும் துறைமுகத்திற்கும் தற்போது நிறுவப்பட்டுள்ள புகையிரத வீதி மற்றும் . தாங்கி முறைமை என்பவற்றை பயன்படுத்துவதற்கான வசதிகள் மிகவும் சாதகமான ஒன்றாக உள்ளதாகவும்

(உ) மேலும் சிங்கப்பூரில் கையாளும் வகையில் வலய எரிபொருள் கேந்திர நிலையமொன்றாக (Regional Energy Hub) செயற்படுவவதற்கு இடமிருப்பதாக மேலும் குறிப்பிடப்பட்டிருந்தது.

6.4.8 அம்பாந்தொட்டை துறைமுகத்திற்கு அண்மத்தாக நிர்மாணிக்கப்பட்ட தாங்கி தொகுதியொன்று காணப்பட்ட போதும் இதுவரை அத்தாங்கிகளும் எரிபொருள் களஞ்சியப்படுத்தலுக்காக பயன்படுத்தப்படவில்லை.

6.4.9 முறையான இருப்புக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை செயற்படுத்துதல், கட்டளையிட்ட எரிபொருள் முறையாக உரிய கால நேரத்தில் களஞ்சியத்திற்கு கிடைத்தல், தேவையான விதந்துரைகளுடன் கூடிய எரிபொருள் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் வழங்குதல், கப்பல் மற்றம் ஏனைய போக்குவரத்து ஊடகங்களை உயர் மட்டத்தில் பயன்படுத்துதல் உள்ளக குழாய் மார்க்க மூலம் எரிபொருளை இறக்குது தொடர்பில் தடையொன்று இல்லாதிருத்தல், எரிபொருள் முனையங்களுக்கு இடையே இலகுவாகவும் காலதாமதமின்றியும் இடமாற்றல் போன்ற விடயங்கள் என்பன முழு அளவில் பூர்த்தி செய்யப்பட்டால் இரண்டு பிரதான முனையங்களும் பிராந்திய களஞ்சியங்களின் இயலளவும் உயர்ந்த வகையில் பயன்படுத்த முடியும்..

## 6.5 எரிபொருள் களஞ்சிய பயன்பாடு

இலங்கையில் தற்போது பயன்பாட்டில் உள்ள அறிக்கையின் மூலம் வெளிப்படுத்தப்படும் ஒட்டுமொத்த எண்ணைய் களஞ்சிய தொகுதியையும் கருத்திற் கொண்டு அந்த அனைத்து களஞ்சியங்களும் முழுமையாக (நூறு சதவீதம்) பயன்படுத்த முடியுமென கருத்திற்கொள்ளப்பட்ட சந்தர்ப்பத்தில் 2019 ஆம் ஆண்டின் எரிபொருள் கேள்வியை அடிப்படையாக கொண்டு இலங்கைக்கு சொந்தமான தற்போது பயன்பாட்டில் காணப்படும் எரிபொருள் களஞ்சியங்களின் இயலளவில் எத்தனை நாட்களுக்காக நாட்டின் தேவைப்பாட்டினை மேவுகை செய்வதற்கு போதியளவில் உள்ளது என அட்டவணை இல 06 மூலம் நிரூபணமாகின்றது.

**அட்டவணை இல 06 - அனைத்து களஞ்சியங்களும் முழுமையாக பயன்படுத்தப்படும் போது நாட்டின் எரிபொருள் தேவைப்பாடு மேவுகை செய்யப்படக்கூடிய நாட்களின் எண்ணிக்கை**

| உற்பத்தி | டீசல் | பெற்றோல் | விமான எரிபொருள் | மண்ணெண்ணெய் |
|---|---|---|---|---|
| திரட்டிய களஞ்சிய பயன்பாடு (கிலோ லீட்டர்) | 210,207 | 166,927 | 65,968 | 22,557 |
| நாளாந்த எரிபொருள் கேள்வி 2019 ஆம் ஆண்டு (கிலோ லீற்றர்) | 7,902 | 7,084 | 1,640 | 777 |
| களஞ்சியப்படுத்தக்கூடிய இயலளவில் மேவுகை செய்யக்கூடிய ஆகக் கூடிய நாட்கள் | **27** | **24** | **40** | **29** |

6.5.2 தற்போது பயன்பாட்டில் காணப்படும் களஞ்சிய இயலளவில் எவ்வித வேறுபாடொன்றும் இருக்காது என்ற அனுமானத்தின் அடிப்படையில் 2026 ஆம் ஆண்டளவில் மதிப்பிடப்பட்ட சராசரி எரிபொருள் தேவையைக் கருத்தில் கொண்டு, நாட்டின் மொத்த தேவைக்கேற்ப 2026 ஆம் ஆண்டளவில் இலங்கையில் உள்ள பயன்படுத்தும் மொத்த களஞ்சிய முறைமை நாட்டின் மொத்த தேவைப்பாட்டின் பிரகாரம் எவ்வளவு நாட்களுக்கு களஞ்சியப்படுத்த முடியுமா என பின்வருமாறு மதிப்பீடு செய்யப்பட்டது.

**அட்டவணை இல 07 - நாட்டின் தேவைக்காக போதியளவு எரிபொருள் அளவு (பயன்படுத்தப்படும் எரிபொருள் களஞ்சியத்தில் மாற்றமொன்று இடம்பெறாவிட்டால்)**

| உற்பத்தி | டீசல் | பெற்றோல் | விமான எரிபொருள் | மண்ணெண்ணெய் |
|---|---|---|---|---|
| திரட்டிய களஞ்சிய பயன்பாடு (கிலோ லீட்டர்) | 210,207 | 166,927 | 65,968 | 22,557 |
| 2026 ஆம் ஆண்டளவில் நாளாந்த எரி பொருளுக்கான கேள்வி (கிலோ லீற்றர்) | 10,175 | 7,873 | 2,401 | 970 |
| தற்போது பயன்படுத்தப்படும் களஞ்சிய வசதிகளின் மூலம் மேவுகை செய்யக்கூடிய | **21** | **21** | **27** | **23** |

6.5.3 இந்த அறிக்கையின் 6.4.9 இல் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து காரணிகளும் உயர்ந்த மட்டத்தில் செயற்படுத்தப்படும் போது மேலே உள்ள அட்டவணைகள் 06 மற்றும் 07 இல் உள்ள நிலைமைகள் செயற்படக்கூடும். எவ்வாறாயினும், அவ்வாறான உயர் நிலைமையில் களஞ்சியத்தை பயன்படுத்துவதற்கு முடியுமென இதுவரை அவதானிக்கப்படவில்லை.

6.5.4 பாதுகாப்பான இருப்பொன்றாக அதாவது அவசர சந்தர்ப்பங்களில் பயன்பாட்டிற்காக டெர்மினல்கள் மற்றும் டிப்போக்களில் காணப்படும் எரிபொருள் இயலளவுஎவ்வளவு என்பது மிகவும் முக்கியமானது. எவ்வாறாயினும் இனங்காணக்கூடிய பாதுகாப்பு இருப்பொன்று நாட்டில் பேணப்பட்டிருக்கவில்லை. அதன் பிரகாரம், டீசல், பெற்றோல், விமான எரிபொருள் மற்றும் மண்ணெண்ணெய் கப்பல்களை முனையங்களுக்கு இறகுவதற்கு தய-ாராகும் போது களஞ்சியத்தில் காணப்படும் எரிபொருட்களின் அளவு எத்தனை நாட்களுக்கு எதிர்காலத்தில் போதுமானதென கணக்கிடப்படும். இதற்காக 2018 ஆம் ஆண்டின் போது இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்ட அனைத்து எரிபொருள் கப்பல்களில் இருந்து இறக்குவதற்கு முன்னர் ஒவ்வொரும் உற்பத்திக்கும் உரியதாக காணப்படும் இருப்பு SAP கணனி அமைப்பின் மூலம் பெற்றுக்கொண்டு அதன் சராசரி கணக்கிடப்படும்.

அதன்படி, 2018 ஆம் ஆண்டில் இலங்கைக்கு எரிபொருள் கப்பல்கள் வருகின்ற சந்தர்ப்பத்தில் காணப்பட்ட எரி-பொருள் அளவினை அடிப்படையாக கொண்டு எரிபொருள் கப்பல் வந்தபின் எரிபொருள் இறக்கப்படும் சந்தர்ப்பம் வரை ஒவ்வொரு எரிபொருள் வகையின் பிரகாரம் கருதும் போது களஞ்சியங்களிலுள்ள இருப்பு டீசல், பெற்றோல், விமான எரிபொருள் மற்றும் மண்ணெண்ணெய் எத்தனை நாட்களுக்கு போதுமானதாக இருக்கும் என்பது கீழே காட்டப்பட்டுள்ளது. இங்கு 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளுக்காக ஒவ்வொரு உற்பத்திக்குமான உண்மையான நாளாந்த கேள்வியில் 2020-2026 ஆண்டுகளுக்கான எரிபொருள் கேள்வி குறைந்த சதுர அடி முறைமை பிரகாரம் மதிப்பிடப்பட்ட நாளாந்த கேள்வி கருத்திற் கொள்ளப்பட்டு கணக்கிடல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

6.5.4.1 2018 ஆண்டினை அடிப்படை ஆண்டாக கொண்டு எண்ணெய்க் கப்பலொன்று தரையிறக்கும் சந்தர்ப்பத்தில் களஞ்சியத்தில் காணப்படும் டீசல் இருப்பு எதிர்வரும் காலத்தில் எத்தனை நாட்களுக்கு போதுமானதென்பதை பின்வரும் அட்டவணை மூலம் காட்டப்பட்டுள்ளது. அதாவது எண்ணைக் கப்பல் தாமதமாவதன் காரணமாக நாட்டில் முழுமையாக முடிவடைவதற்கு எடுக்கும் காலம் எவ்வளவு என்பதாகும்.

**அட்டவணை இலக்கம் 08 - 2018 ஆண்டில் காணப்பட்ட சராசரி இருப்பின் பிரகாரம் கப்பலொன்ற வரும் சந்தர்ப்பத்தில் காணப்படும் டீசல் போதுமாக இருக்கம் நாட்களின் எண்ணிக்கை**

| | ஆண்டு | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 2018 | 2019 | 2020 | 2021 | 2022 | 2023 | 2024 | 2025 | 2026 |
| எண்ணைய்க் கப்பலொன்று தரையிறக்கும் சந்தர்ப்பத்தில் காணப்பட்ட டீசல் அளவு | | | | | | | | | |
| சராசரி | 141,626 | 141,626 | 141,626 | 141,626 | 141,626 | 141,626 | 141,626 | 141,626 | 141,626 |
| குறைந்த | 93,327 | 93,327 | 93,327 | 93,327 | 93,327 | 93,327 | 93,327 | 93,327 | 93,327 |
| கூடிய | 179,924 | 179,924 | 179,924 | 179,924 | 179,924 | 179,924 | 179,924 | 179,924 | 179,924 |
| நாளாந்த எரிபொருள் கேள்வி | 7,285 | 7,902 | 8,382 | 8,662 | 8,941 | 9,221 | 9,501 | 9,780 | 10,060 |
| களஞ்சியங்களில் காணப்படும் இருப்பு போதுமாகும் நாட்களின் | | | | | | | | | |
| சராசரி | 19 | 18 | 17 | 16 | 16 | 15 | 15 | 14 | 14 |
| குறைந்த | 13 | 12 | 11 | 11 | 10 | 10 | 10 | 10 | 9 |
| கூடிய | 25 | 23 | 21 | 21 | 20 | 20 | 19 | 18 | 18 |

**வரைபட இலக்கம் 06 – கப்பலொன்று வரும் சந்தர்ப்பத்தில் காணப்படும் இருப்பு போதுமான நாட்கள் அளவு (டீசல்)**




6.5.4.2 2018 ஆண்டினை அடிப்படையாக ஆண்டாக கொண்டு எண்ணைய்க் கப்பலொன்று தரையிறக்கும் சந்தர்ப்பத்தில் களஞ்சியத்தில் காணப்படும் பெற்றோல் இருப்பு எதிர்வரும் காலத்தில் எத்தனை நாட்களுக்கு நாட்டின் பெற்றோல் தேவைக்கு போதுமானது என்பதை பின்வரும் அட்டவணை மூலம் காட்டப்பட்டுள்ளது. அதாவது எண்ணைக் கப்பல் தாமதமாவதன் காரணமாக நாட்டில் முழுமையாக முடிவடைவதற்கு எடுக்கும் காலம் எவ்வளவு என்பதாகும்.

**அட்டவணை இல. 09 - 2018 ஆண்டில் காணப்பட்ட சராசரி இருப்பின் பிரகாரம் பெற்றோலுக்கான கப்பலொன்று வரும் போது காணப்படும் இருப்பு போதுமாகும் நாட்கள்**

| | ஆண்டு | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 2018 | 2019 | 2020 | 2021 | 2022 | 2023 | 2024 | 2025 | 2026 |
| எண்ணைய்க் கப்பலொன்று தரையிறக்கும் சந்தர்ப்பத்தில் காணப்பட்ட டீசல் அளவு | | | | | | | | | |
| சராசரி | 90,474 | 90,474 | 90,474 | 90,474 | 90,474 | 90,474 | 90,474 | 90,474 | 90,474 |
| குறைந்த | 49,426 | 49,426 | 49,426 | 49,426 | 49,426 | 49,426 | 49,426 | 49,426 | 49,426 |
| கூடிய | 228,355 | 228,355 | 228,355 | 228,355 | 228,355 | 228,355 | 228,355 | 228,355 | 228,355 |
| நாளாந்த எரிபொருள் கேள்வி | 6,420 | 7,084 | 5,563 | 5,948 | 6,333 | 6,718 | 7,103 | 7,488 | 7,873 |
| களஞ்சியங்களில் காணப்படும் இருப்பு போதுமாகும் நாட்களின் எண்ணிக்கை | | | | | | | | | |
| சராசரி | 14 | 13 | 16 | 15 | 14 | 13 | 13 | 12 | 11 |
| குறைந்த | 8 | 7 | 9 | 8 | 8 | 7 | 7 | 7 | 6 |
| கூடிய | 36 | 32 | 41 | 38 | 36 | 34 | 32 | 30 | 29 |

**வரைபட இல. 07 – பாதுகாப்பு இருப்பு போதுமான நாட்கள் அளவு (பெற்றோல்)**




6.5.4.3 2018 ஆண்டினை அடிப்படையாக ஆண்டாக கொண்டு எண்ணைய்க் கப்பலொன்று தரையிறக்கும் சந்தர்ப்பத்தில் களஞ்சியத்தில் காணப்படும் விமான எரிபொருள் மற்றும் மண்ணெண்ணைய் எதிர்வரும் காலத்தில் எத்தனை நாட்களுக்கு நாட்டின் விமான எரிபொருள் மற்றும் மண்ணெண்ணைய் என்பன தேவைக்கு போதுமானது என்பதை பின்வரும் அட்டவணை மூலம் காட்டப்பட்டுள்ளது. அதாவது எண்ணைக் கப்பல் தாமதமாவதன் காரணமாக நாட்டில் முழுமையாக முடிவடைவதற்கு எடுக்கும் காலம் எவ்வளவு என்பதாகும்.

**அட்டவணை இலக்கம் 10 – 2018 ஆம் ஆண்டில் காணப்படுகின்ற சராசரி இருப்பின் பிரகாரம் கப்பல் வருகைதரும் சந்தர்ப்பத்தின் போது விமானத்திற்கான எரிபொருள் மற்றும் மண்ணெண்ணெய் இருப்புக்கள் போதியதான நாட்களின் எண்ணிக்கை**

| | ஆண்டு | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 2018 | 2019 | 2020 | 2021 | 2022 | 2023 | 2024 | 2025 | 2026 |
| எரிபொருள் கப்பல் தரையிறக்குவதற்கு ஆயத்தமான சந்தர்ப்பத்தில் அனைத்து களஞ்சியங்களிலும் காணப்படுகின்ற விமானங்களுக்கான எரிபொருள் மற்றும் மண்ணெண்ணையின் அளவு | | | | | | | | | |
| சராசரி | 33,791 | 33,791 | 33,791 | 33,791 | 33,791 | 33,791 | 33,791 | 33,791 | 33,791 |
| ஆகக் குறைந்தது | 15,786 | 15,786 | 15,786 | 15,786 | 15,786 | 15,786 | 15,786 | 15,786 | 15,786 |
| ஆகக்கூடியது | 93,433 | 93,433 | 93,433 | 93,433 | 93,433 | 93,433 | 93,433 | 93,433 | 93,433 |
| நாளாந்த எரிபொருள் வேண்டுதல் | 2,503 | 2,417 | 2,575 | 2,705 | 2,836 | 2,967 | 3,097 | 3,228 | 3,358 |
| களஞ்சியங்களில் காணப்படுகின்ற இருப்புக்கள் போதியதான நாட்களின் எண்ணிக்கை | | | | | | | | | |
| சராசரி | 13 | 14 | 13 | 12 | 12 | 11 | 11 | 10 | 10 |
| ஆகக்குறைந்தது | 6 | 7 | 6 | 6 | 6 | 5 | 5 | 5 | 5 |
| ஆகக்கூடியது | 37 | 39 | 36 | 35 | 33 | 31 | 30 | 29 | 28 |

**உருவரிப்படம் 08 – கப்பல் வருகை தருகின்ற சந்தர்ப்பத்தில் காணப்படுகின்ற இருப்புக்கள் போதியதான நாட்களின் எண்ணிக்கை (விமானங்களுக்கான எரிபொருள் மற்றும் மண்ணெண்ணை)**




## 6.6 எரிபொருள் போக்குவரத்து முறைமை தொடர்பான அறிமுகம்

இலங்கையில் எரிபொருள் போக்குவரத்திற்காக இரண்டு பிரதான முறைமைகள் பயன்படுத்தப்படுகின்றன.

I. குழாய்கள் மூலமான போக்குவரத்து

II. தரைப் போக்குவரத்து

### 6.6.1 குழாய் போக்குவரத்து முறைமை

6.6.1.1 இலங்கையில் குழாய்கள் மூலம் எரிபொருள் போக்குவரத்து பிரதானமாகப் பயன்படுத்தப்படுவது எரிபொருள் கப்பல்களிலிருந்து பிரதான எரிபொருள் நிலையத்திற்கும் சுத்திகரிப்பு நிலையத்திற்கும் எரிபொருளை போக்குவரத்துச் செய்வதற்காக என்பதுடன் சுத்திகரிப்பு நிலையத்திலிருந்து களஞ்சியம் வரை மற்றும் சிறிய அளவில் மின்சாரத்தை உற்பத்தி செய்யும் கம்பனிகளுக்கு எரிபொருள் குழாய்களின் மூலம் போக்குவரத்துச்

செய்யப்படுகின்றது. அதற்கிணங்க, தற்பொழுது பயன்படுத்தப்படுகின்ற பிரதான எரிபொருள் போக்குவரத்து குழாய் முறைமைகள் பின்வருமாறாகும்.

I. கொழும்பு துறைமுகத்திலிருந்து கொலன்னாவ எரிபொருள் நிலையம் வரையான குழாய் முறைமைகள்.

II. கடலுக்கு மத்தியில் அமைக்கப்பட:டுள்ள Single Point Buoy Mooring – SPBM இலிருந்து கடல் மற்றும் தரையினூடாக முதுராஜவெல வரை அமைக்கப்பட்ட குழாய் முறைமை.

III. கடலுக்கு மத்தியில் அமைக்கப்பட்டுள்ள SPBM இலிருந்து ஹபுகஸ்கந்த எரிபொருள் சுத்திகரிப்பு நிலையம் வரையுமான குழாய் முறைமைகள்

IV. ஹபுகஸ்கந்த எரிபொருள் சுத்திகரிப்பு நிலையத்திலிருந்து கொலன்னாவ எரிபொருள் நிலையம் வரையுமான குழாய் முறைமைகள்

6.6.1.2 இக்குழாய் முறைமைகளுக்கிடையே கடலுக்கு மத்தியில் அமைக்கப்பட்டுள்ள SPBM இலிருந்து ஹபுகஸ்கந்த எரிபொருள் சுத்திகரிப்பு நிலையம் வரையும் மசகு எண்ணையை எடுத்துச் செல்வதற்கும் சுத்திகரிப்பு நிலையத்திலிருந்து கொலன்னாவ எரிபொருள் நிலையம் வரை எரிபொருள் சார்ந்த பூர்த்திசெய்யப்பட்ட உற்பத்திகளை எடுத்துச் செல்வதற்காக ஸ்தாபிக்கப்பட்ட குழாய் வழி முறைமைகளானவை இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமானதாக உள்ளதுடன் ஏனைய குழாய் வழி முறைமைகள் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் துணைக் கம்பனியான இலங்கை பெற்றோலிய மொத்தக் களஞ்சிய கம்பனிக்குச் சொந்தமானதாகும்.

6.6.1.3 அறிக்கையின் 6.6.1.1(i) ஆம் பந்தியில் குறிப்பிட்டவாறு இலங்கை பெற்றோலிய மொத்த களஞ்சிய கம்பனியின் கீழ் நிருவகிக்கப்படுகின்ற கொழும்பு துறைமுகத்திலிருந்து கொலன்னாவ நிலையம் வரை பல தசாப்தங்களுக்கு முன்னர் ஸ்தாபிக்கப்பட்ட எரிபொருள் குழாய் முறைமையானது பிரதான ஐந்து குழாய்களை உள்ளடக்கியுள்ளன. இக்குழாய் வழி முறைமையின் ஒவ்வொரு குழாயும் தற்போது 45 ஆண்டுகளிலிருந்து 75 ஆண்டுகள் வரையான காலம் பழைமை வாய்ந்த போதிலும் இக்குழாய்கள் 25 ஆண்டுகள் நிலைத்திருக்கும் உறுதிப்பாட்டின் பேரில் நிர்மாணிக்கப்பட்டவைகளாகும். எரிபொருள் வளங்கள் அபிவிருத்தி அமைச்சினால் ஸ்தாபிக்கப்பட்ட 2018 செப்தெம்பர் 11 ஆந் திகதிய 48/2018 ஆம் இலக்க அமைச்சரவை பத்திரத்தின் பிரகாரம் (பின்னிணைப்பு 05) இக்குழாய் முறைமைகளின் நிலைமை கீழே தரப்பட்டுள்ளதுடன் இன்று வரையும் அந்நிலைமையிலேயே காணப்படுகின்றது.

**அட்டவணை இலக்கம் - 11 கொழும்பு துறைமுகத்திலிருந்து கொலன்னாவை நிலையம் வரையான குழாய் முறைமையின் நிகழ்கால செயற்பாட்டு நிலைமை**

| குழாயின் அளவு | உற்பத்திப் பொருள் | நிகழ்கால நிலைமை |
|---|---|---|
| 10” | டீசல் | செயற்படும் நிலையில் காணப்படுவதுடன் அடிக்கடி கசிவுகள் காணப்பட்டன. |
| 10” | ஏனைய சுத்திகரிக்கப்பட்ட எரிபொருள் (Other white oil) | கொலன்னாவையிலிருந்து களணிதிஸ்ஸ மின் வலு நிலையத்திற்கு மாத்திரம் எரிபொருள் எடுத்துச் செல்லப்படுவதுடன், அடிக்கடி கசிவுகள் காணப்பட்டன. |
| 10” | நெப்தா | செயற்பாடற்றுக் காணப்பட்டது. (பாவனையிலிருந்து அகற்றப்பட்டுள்ளது) |
| 12” | நெப்தா | செயற்பாடற்றுக் காணப்பட்டது. (PSTL நிறுவனத்தினால் புனரமைப்புச் செய்யப்பட்டு வருகின்றது) |
| 14” | உராய்வு நீக்கி எண்ணை | செயற்படும் நிலையில் காணப்படுவதுடன் அடிக்கடி கசிவுகள் காணப்பட்டன. |

6.6.1.4 கொழும்பு துறைமுகத்திலிருந்து கொலன்னாவை எரிபொருள் நிலையம் வரை அமைக்கப்பட்டுள்ள மேற்கூறிய குழாய் முறைமையில் அடிக்கடி கசிவுகள் அறிவிக்கப்பட்டிருந்ததுடன் 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளின் போது மாத்திரம் 06 சந்தர்ப்பங்களின் போது எண்ணைக் கசிவுகள் அறிவிக்கப்பட்டிருந்தன. இறக்குமதி செய்யப்பட்ட சுத்திகரிக்கப்பட்ட உற்பத்திப் பொருட்களில் 70 சதவீதம் அளவானவை எடுத்துச்செல்லப்படுவது இக்குழாய் முறைமைகளினூடாகும்.

6.6.1.5 அறிக்கையின் 6.6.1.1.(ii) ஆம் பந்தியின் மூலம் காட்டப்பட்டுள்ள முதுராஜவெல எரிபொருள் நிலையத்திலிருந்து 7.2 கிலோமீற்றர் மற்றும் கடற்கரையிலிருந்து 6 கிலோமீற்றர் அளவான தூரத்தில் கடலுக்கு மத்தியில் அமைக்கப்பட்டுள்ள Single Point Buoy Mooring வசதிகள் வழிகளிலிருந்து முதுராஜவெல நிலையத்திற்கு இறக்குமதி செய்யப்பட்ட பூர்த்தியான எரிபொருள் உற்பத்திகளை எடுத்துச் செல்வதற்காக ஸ்தாபிக்கப்பட்ட முறைமையில் இரண்டு குழாய்கள் காணப்படுகின்றன. ஒட்டுமொத்த சுத்திகரிக்கப்பட்ட உற்பத்திப்பொருள் இறக்குமதியின் 30 சதவீதம் அளவானவை இந்நிலையத்திற்கு தரையிறக்கப்படுவதுடன் முதுராஜவெல நிலையம் ஆரம்பத்திலிருந்து அதாவது 2004 ஆம் ஆண்டிலிருந்து டீசல், மண்ணெண்ணை ஆகிய பெற்றோலிய உற்பத்திகளைத் தனித்தனியாக ஒரே குழாய் வழியினூடாக முத்துராஜவெல மிதவையிலிருந்து முத்துராஜவெல எரிபொருள் நிலையம் வரை எடுத்துச்செல்லப்பட்டிருந்தது. கடந்த காலத்தில் அதாவது 2010 ஆம் ஆண்டில் புதிய குழாய் ஸ்தாபிக்கப்பட்டதன் பின்னர் மேற்கூறிய உற்பத்திப் பொருட்களுக்கு மேலதிமாக பெற்றோல் களஞ்சிய நிலைய கம்பனியின் கீழ் நிருவகிக்கப்படுகின்ற இந்த 02 குழாய் வழிகளினதும் நிகழ்கால நிலைமை கீழே தரப்படுகின்றது.

**அட்டவணை இலக்கம் 12 – முத்துராஜவெல மிதவையிலிருந்து முத்துராஜவெல நிலையம் வரை எரிபொருள் எடுத்துச் செல்லப்படுகின்ற குழாய்களின் செயற்பாட்டு நிலைமை**

| குழாயின் அளவு | உற்பத்தி | நிகழ்கால நிலைமை |
|---|---|---|
| 18″ | உராய்வு நீக்கி எண்ணை | செயற்படும் நிலைமையில் காணப்பட்டது. எனினும், தற்பொழுது பயன்படுத்தப்படுவதில்லை. |
| 18″ | டீசல் / மண்ணெண்ணை / பெற்றோல் | செயற்படும் நிலையில் காணப்பட்டது. |

6.6.1.6 மேலே 6.6.1.1 (iii) ஆம் பந்தியில் காட்டப்பட்ட கடலுக்கு மத்தியில் அமைக்கப்பட்டுள்ள SPMB இலிருந்து ஒருகொடவத்த நிலையத்தினூடாக சபுகஸ்கந்த எண்ணை சுத்திகரிப்பு நிலையம் வரை மசகு எண்ணையை செல்வதற்காக 24” விட்டமுள்ள குழாய்களை உள்ளடக்கிய குழாய் முறைமைகள் பயன்படுத்தப்படுவதுடன் இது தற்பொழுது செயற்படும் நிலையில் காணப்படுகின்றது.

6.6.1.7 மேலே 6.6.1.1(iv) ஆம் பந்தியின் மூலம் காட்டப்பட்டுள்ள சபுகஸ்கந்த எண்ணை சுத்திகரிப்பு நிலையத்திலிருந்து கொலன்னாவ பெற்றோலிய குதம் வரை பெற்றோலியத்தை எடுத்துச் சென்ற குழாய் முறைமையானது பிரதான 03 குழாய்களை உள்ளடக்கியிருந்தன. அதன் செயற்பாடுகள் பின்வருமாறாகும்.

**அட்டவணை இலக்கம் 13 - சபுகஸ்கந்த எண்ணை சுத்திகரிப்பு நிலையத்திலிருந்து கொலன்னாவை பெற்றோலியக் குதம் வரை பெற்றோலியத்தை எடுத்துச் செல்கின்ற முறைமையின் செயற்பாட்டு நிலைமை**

| குழாயின் அளவு | உற்பத்தி | நிகழ்கால நிலைமை |
|---|---|---|
| 6″ | நெப்தா | செயற்படும் நிலையில் காணப்பட்டது. |
| 8″ | டீசல் / மண்ணெணை | செயற்படும் நிலையில் காணப்பட்டது. |
| 12″ | உராய்வு நீக்கி எண்ணை | செயற்படும் நிலையில் காணப்பட்டது. |

அட்டவணை இலக்கம் 13 இல் குறிப்பிட்ட 12 அங்குல உராய்வு நீக்கி எண்ணைக் குழாயினால் மூலம் எரிபொருளை எடுத்துச் செல்லும் சந்தர்ப்பத்தில் இரண்டு குழாய்களையும் வழக்கமாகப் பயன்படுத்துகின்ற பிரதேசம் காணப்படுமாக இருந்தால் அதற்கு இணையாக அட்டவணை இலக்கம் 11 இல் காட்டப்பட்டுள்ள 14 அங்குல உராய்வு நீக்கி எண்ணைக் குழாய்களை பயன்படுத்த முடியாதுள்ளது.

### 6.6.2 தரைமார்க்கமாக எரிபொருளை எடுத்துச்செல்லல்

எரிபொருளை தரைமூலம் எடுத்துச் செல்லும் பிரதான முறைமைகள் இரண்டாகும்.

I. எரிபொருள் பவுசர் மூலம் எடுத்துச் செல்லல்.

II. புகையிரத தாங்கிகள் மூலம் எடுத்துச் செல்லல்.

6.6.2.1 கொலன்னாவ நிலையத்திலிருந்து பெற்றோல், டீசல், மண்ணெண்ணை விமானத்திற்கான எரிபொருள் மற்றும் ஏனைய உற்பத்திகள் நாடு முழுவதும் அமைந்துள்ள களஞ்சியங்களுக்கு பவுசர் மற்றும் புகையிரத தாங்கிகளைப் பயன்படுத்தி எடுத்துச் செல்லப்படுகின்றது. இதன்போது இலங்கை பெற்றோலிய மொத்த களஞ்சிய கம்பனிக்குச் சொந்தமான பவுசர்களின் மூலம் அதேபோல வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்பட்ட பவுசர்களின் மூலமும் எடுத்துச்செல்லப்படுகின்றன. மேலும், கொலன்னாவ நிலையத்திலிருந்து கட்டுநாயக்கா வரை விமானங்களுக்கான எரிபொருள் புகையிரத தாங்கிகள் மற்றும் பவுசர்கள் பயன்படுத்தப்பட்டு எடுத்துச் செல்லப்படுகின்றன.

6.6.2.2 புகையிரத தாங்கிகளின் மூலம் பிரதானமாக டீசல், பெற்றோல், மண்ணெண்ணை மற்றும் விமானங்களுக்கான எரிபொருள் மாத்திரம் எடுத்துச் செல்லப்படுகின்றன.

6.6.2.3 முத்துராஜவெல நிலையத்தில் அடிப்படையாக பெற்றோல், டீசல் ஆகிய உற்பத்திப் பொருட்கள் மாத்திரம் களஞ்சியப்படுத்தப்பட்டுள்ளதுடன் இந்நிலையத்திலிருந்து நாடு முழுவதும் அமைந்துள்ள பிராந்திய களஞ்சியங்களுக்கு பவுசர்களின் மூலம் மாத்திரம் பெற்றோலியம் எடுத்துச் செல்லப்படுகின்றன.

6.6.2.4 கொலன்னாவ மற்றும் முத்துராஜவெலயில் அமைந்துள்ள பெற்றோலிய களஞ்சிய நிலையங்களைப் போல சபுகஸ்கந்த புதிய நிலையத்தின் மூலமும் நேரடியாக பாவனையாளர்களுக்கும் எரிபொருளை வழங்குதல் இடம்பெறுகின்றது.

6.6.2.5 அறிக்கையின் 6.4.4. பந்தியில் குறிப்பிட்ட முறைமையில் அறிக்கையின் மூலம் உள்ளடக்கப்படுகின்ற உற்பத்திப்பொருட்களுக்கு தொடர்புபட்ட பிரதான இரண்டு நிலையங்களின் களஞ்சிய கொள்ளளவில் 49.8 சதவீத அளவிலானவை முத்துராஜவெல நிலையத்தில் அமைக்கப்பட்டுள்ளது. எவ்வாறாயினும், முத்துராஜவெல நிலையத்திலிருந்து எரிபொருளை எடுத்துச் செல்வதற்காக புகையிரத தாங்கி வசதிகள் அல்லது ஏனைய குழாய் முறைமை ஸ்தாபிக்கப்பட்டிருக்கவில்லை.

6.6.2.6 2003 திசெம்பர் 13 ஆந் திகதி இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம், இலங்கை இந்தியன் ஒயில் கம்பனி மற்றும் இலங்கை பெற்றோலிய மொத்த களஞ்சிய கம்பனியுடன் மேற்கொண்ட உடன்படிக்கை மற்றும் 2019 மே 21 ஆந் திகதி இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் இலங்கை பெற்றோலிய மொத்த களஞ்சிய கம்பனியுடன் மேற்கொண்ட

உடன்படிக்கையின் பிரகாரம் பெற்றோலியத்தை எடுத்துச் செல்வது தொடர்பாக மேற்கொண்ட செலவு இலங்கை பெற்றோலிய மொத்த களஞ்சியக் கம்பனியால் இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்திடமிருந்தும் இலங்கை இந்தியன் ஒயில் கம்பனியிடமிருந்தும் அறவிடப்படும்.

6.6.2.7 எரிபொருளை எடுத்துச் செல்லும் வழி-களைத் தெரிவுசெய்தலானது அடிப்படையாக இலங்கை பெற்றோலிய மொத்தக் களஞ்சிய கம்பனியால் மேற்கொள்ளப்பட்டதுடன் அவர்களினால் சமர்ப்பிக்கப்படுகின்ற விபரங்களை அடிப்படையாகக் கொண்டு இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் மூலம் கொடுப்பனவுகள் இடம்பெறும்.

6.6.2.8 ஒரு கிலோமீற்றர் எரிபொருளை 1 கிலோ மீற்றர் தூரத்திற்கு புகையிரதத்தின் மூலம் மற்றும் பவுசர்களின் மூலம் எடுத்துச் செல்வதற்காக செலவு செய்யப்படுகின்ற சராசரி போக்குவரத்துக் கிரய நிலைமையானது கீழே தரப்படுகின்றது.

**அட்டவணை இலக்கம் 14 – புகையிரதம் மற்றும் பவுசர்களின் மூலம் எடுத்துச் செல்வதற்காக செலவு செய்யப்படுகின்ற சராசரி போக்குவரத்துக் கிரயம்**

| **எரிபொருள் வகை** | **புகையிரத தாங்கிகள்** | **பவுசர்கள்** | **புகையிரத தாங்கிகளின் மூலம் எடுத்துச் செல்லும் கிரயத்திற்கு ஒப்பீட்டு ரீதியாக பவுசர்களின் மூலம் எடுத்துச் செல்வதின் மேல-திக கிரயம்** | |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | புகையிரத கிரயத்துடன் ஒப்பிடுகையில் அதிகரிக்கும் சதவீதம் |
| பெற்றோல் 92 ஒக்டேன் (மேட்டுநில வழி) | 3.81 | 12.94 | 9.13 | 240 |
| பெற்றோல் 92 ஒக்டேன் (தாழ்நில வழி) | 3.26 | 10.91 | 7.65 | 235 |
| மண்ணெண்ணை (மேட்டுநில வழி) | 4.11 | 12.94 | 8.83 | 215 |
| மண்ணெண்ணை | 3.52 | 10.91 | 7.39 | 210 |
| இலங்கை ஓட்டோ டீசல் (மேட்டுநில வழி) | 4.44 | 12.94 | 8.50 | 191 |
| இலங்கை ஓட்டோ டீசல் (தாழ்நில வழி) | 3.81 | 10.91 | 7.10 | 186 |
| ஆகாய விமானங்களுக்கான எரிபொருள் | 4.70 | 8.78 | 4.08 | 87 |

மேலே காட்டப்பட்டுள்ள வகையில் புகையிரதத்தின் மூலம் எரிபொருளை 1 கிலோமீற்றர் தூரத்திற்கு எடுத்துச் செல்வதற்கு செலவு செய்யப்படும் கிரயத்தை வாகனங்களின் மூலம் எரிபொருளை 1 கிலே-ாமீற்றர் தூரத்திற்கு எடுத்துச் செல்வதற்கு செலவாகும் கிரயத்துடன் ஒப்பிடுகையில் மிகவும் சாதகமாக இருந்தது.

# 07

# கணக்காய்வு அவதானிப்புக்கள்

## 7.1 களஞ்சிய வசதிகள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

7.1.1 அறிக்கையின் 6.5.1 ஆம் பந்தியில் காட்டப்பட்ட வகையில் நாட்டிலுள்ள அனைத்து எரிபொருள் களஞ்சியங்களினதும் கொள்லவளவானது ஒவ்வொரு எரிபொருள் வகையினையும் தனித்தனியாக கவனத்திற்கு எடுத்துக்கொண்ட போது களஞ்சியப்படுத்தக் கூடியதானது முறையே டீசலுக்காக 27 நாட்கள், பெற்றோலுக்காக 24 நாட்கள், மண்ணெணைக்காக 29 நாட்கள் மற்றும் விமானங்களின் எரிபொருக்காக 40 நாட்கள் தேவைப்பாட்டிற்கு மாத்திரமாகும். எவ்வாறாயினும், இந்நிலைமையும் உச்சஅளவான பயன்பாட்டிற்காக இறக்குமதி செய்யப்படுகின்ற சந்தர்ப்பங்களின் போது அனைத்து தாங்கிகளும் நிரப்பப்பட்டிருத்தல் வேண்டியதுடன் அறிக்கையின் 6.4.9 ஆம் பந்தியின் மூலம் காட்டப்பட்டுள்ள அனைத்து விடயங்களையும் முழுமையாக அடைந்து கொள்ளப்படுதல் வேண்டும். எவ்வாறாயினும், அவ்வாறான நிலைமையினை நடைமுறையில் காண முடியாததுடன் அவசர சந்தர்ப்பங்களின் போது பயன்பாட்டிற்காக நாட்டில் காணப்படுகின்ற எரிபொருளின் அளவானது (பாதுகாப்பு இருப்பு – Buffer Stock ஒப்பீட்டு ரீதியில் மிகவும் குறுகிய காலத்திற்கு நாட்டின் தேவைப்பாட்டிற்காக மாத்திரம் என்பது அவதானிக்கப்பட்டது. அறிக்கையின் 6.2.4 ஆம் பந்தியில் குறிப்பிட்ட வகையில் எரிபொருள் வேண்டுதல் படிப்படியாக அதிகரித்து வருகின்றது என்பது அவதானிக்கப்பட்டது. அதற்கிணங்க தற்பொழுது பயன்பாட்டில் காணப்படுகின்ற எரிபொருள் களஞ்சியங்களின் அளவு மாற்றமடையாது காணப்படுமாகயிருந்தால் 2026 ஆம் ஆண்டளவில் நாட்டிலுள்ள எரிபொருள் களஞ்சியங்கள் போதியதானது முறையே டீசலுக்கு 21 நாட்கள், பெற்றோலுக்கு 21 நாட்கள், விமானங்களுக்கான எரிபொருளுக்கு 27 நாட்கள் மற்றும் மண்ணெண்ணைக்காக 23 நாட்கள் மாத்திரமாகும். அது அடுத்துவரும் சில ஆண்டுகளின் போது நாட்டின் எரிபொருள் வழங்கல் தொடர்பாக அதிகளவான பாதகமான தாக்கத்தை ஏற்படுத்தலாம் என்பது அவதானிக்கப்பட்டது.

7.1.2 மேலே உள்ள 6.5.4 ஆம் பந்தியின் மூலம் விபரிக்கப்படுகின்ற கப்பல் வருகைதருகின்ற சந்தர்ப்பங்களின் போது காணப்படுகின்ற இருப்புக்கள் தொடர்பாக அட்டவணை இலக்கம் 8 இல் காட்டப்படுகின்ற 2018 ஆம் ஆண்டை அடிப்படை ஆண்டாக கருதும் போது 2019 ஆம் ஆண்டில் கப்பல் வருகை தருகின்ற சந்தர்ப்பத்தில் காணப்பட்ட டீசல்களின் சராசரி இருப்பு 18 நாட்களுக்கு மட்டுப்படுத்தப்பட்டிருந்ததுடன் அதன் ஆகக்குறைந்த நிலைமையின் போது மேலும் 12 நாட்கள் கப்பல் தாமதமடையுமாக இருந்தால் நாட்டின் ஒட்டுமொத்த டீசல் வழங்குதலானது தடைப்படும். நாட்டில் டீசலுக்கான வேண்டுதல் படிப்படியாக அதிகரித்துள்ளதுடன் எதிர்வுகூறலின் பிரகாரமும் அது படிப்படியாக அதிகரித்துச் செல்லுதல் அவதானிக்கப்பட்டது. அதற்கிணங்க நாட்டின் களஞ்சிய கொள்ளளவு அதிகரிக்கப்படவில்லையாயின் எதிர்வுகூறப்பட்ட சராசரி வேண்டுதலின் அடிப்படையில் 2026 ஆம் ஆண்டளவில் டீசல்களுக்கு உரிய கப்பல் வருகை தருகின்ற சந்தர்ப்பத்தின் போது காணப்பட்ட இருப்புக்களின் அளவானது 14 நாட்கள் அதாவது இரண்டு வாரங்கள் அளவான காலத்திற்காகும். இதன் ஆகக் குறைந்த நிலைமையைக் கருத்திற்கொள்ளும் போது அது போதியதானது 09 நாட்கள் அளவிலாகும். அதாவது ஏதாவது காரணத்தின் அடிப்படையில் டீசல் கப்பல் தாமதமடையுமாகயிருந்தால் நாட்டில் காணப்படுகின்ற டீசல் இருப்பு 09 நாட்களின் போது முழுமையாக முடிவடையும் என்பது அவதானிக்கப்பட்டது.

7.1.3 மேலே 6.5.4 ஆம் பந்தியின் மூலம் விபரிக்கப்பட்ட கப்பல் வருகை தருகின்ற சந்தர்ப்பத்தில் காணப்பட்ட இருப்பிற்கு உரிய அட்டவணை இலக்கம் 09 இல் தரப்பட்டவாறு 2018 ஆம் ஆண்டில் கப்பல் வருகை தந்த சந்தர்ப்பத்தின் போது காணப்பட்ட பெற்றோல் சராசரி இருப்பு 14 நாட்களுக்கு மாத்திரம் போதியதாக இருந்ததுடன் அது 2019 ஆம் ஆண்டளவில் 13 நாட்கள் வரை குறை-

வடைந்திருந்தது. இதன் ஆகக்குறைந்த நிலைமையினை கவனத்திற்கு எடுத்துக்கொண்ட போது 2018 ஆம் ஆண்டில் பெற்றோலுக்கான கப்பல் வருகைதந்த சந்தர்ப்பத்தில் காணப்பட்ட இருப்புக்களின் அளவானது 08 நாட்களுக்கு மாத்திரமாக இருந்ததுடன் 2019 ஆம் ஆண்டளவில் அது 07 நாட்கள் வரை குறைவடைந்திருந்தது. அதாவது பெற்றோல் கப்பல் 07 நாட்கள் தாமதமடையுமாக இருந்தால் நாட்டில் காணப்பட்ட ஒட்டுமொத்த பெற்றோல் இருப்பு குறைவடையும் என்பது அவதானிக்கப்பட்டது. நாட்டில் பெற்றோலுக்கான வேண்டுதலும் படிப்படியாக அதிகரித்து வருகின்றமையும் அவதானிக்கப்பட்டதுடன் அடுத்துவரும் சில ஆண்டுகளுக்கான எதிர்வுகூறல்களின் பிரகாரமும் அதன் படிப்படியான அதிகரிப்பு அவதானிக்கப்பட்டது. அதற்கிணங்க தற்பொழுது காணப்படுகின்ற களஞ்சிய கொள்ளளவை அதிகரிக்கச் செய்யாது விட்டால் எதிர்வுகூறப்பட்ட தரவுகளை அடிப்படையாகக் கொண்டு 2026 ஆம் ஆண்டளவில் கப்பல் வருகை தருகின்ற சந்தர்ப்பத்தின் போது காணப்படுகின்ற பெற்றோல் இருப்பு நாட்டின் 11 நாட்கள் தேவைப்பாட்டிற்கு மாத்திரம் போதிய-தாக இருக்கும். இதில் ஆகக்குறைந்த நிலைமையை கவனத்திற் எடுத்துக்கொள்ளும் போது நாட்டின் 06 நாட்கள் பெற்றோல் தேவைப்பாட்டிற்கு மாத்திரம் போதியதாகும். அதாவது ஏதாவது காரணத்தின் அடிப்படையில் பெற்றோல் கப்பல் 06 நாட்கள் தாமதமடையுமா-கயிருந்தால் நாட்டில் காணப்படுகின்ற அனைத்து பெற்றோல் இருப்பும் முடிவடை-யும் எனவும் அது அதிக ஆபத்தான நிலைமை எனவும் அவதானிக்கப்பட்டது.

7.1.4 மேலே 6.5.4 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட கப்பல் வருகை தருகின்ற சந்தர்ப்பத்தில் காணப்படுகின்ற ஆகாய விமானங்களுக்கான எரிபொருள் மற்றும் மண்ணெண்ணை இருப்பிற்கு தொடர்புபட்ட அட்டவணை இலக்கம் 10 இல் தரப்பட்டுள்ளவாறு 2018 ஆம் ஆண்டில் கப்பல் வருகை தருகின்ற சந்தர்ப்பத்தின் போது காணப்பட்ட ஆகாய விமானங்களுக்கான எரிபொருள் மற்றும் மண்ணெண்ணைக்கான சராசரி இருப்பு 13 நாட்களுக்கு மாத்திரம் போதியதானதுடன் அது 2019 ஆம் ஆண்டளவில் 14 நாட்கள் வரை அதிகரித்திருந்தது. இதில் ஆகக்குறைந்த நிலைமையைக் கருத்திற்கொள்ளும் போது 2018 ஆம் ஆண்டில் ஆகாய விமானங்களுக்கான எரி-பொருள் மற்றும் மண்ணெண்ணைக் கப்பல் வருகைதருகின்ற சந்தர்ப்பத்தின்போது காணப்பட்ட இருப்பு 06 நாட்களுக்கு மாத்திரம் போதியதாக இருந்ததுடன் 2019 ஆம் ஆண்டளவில் அது 07 நாட்கள் வரை அதிகரித்திருந்தது. அதாவது விமானங்களுக்கான எரிபொருள் மற்றும் மண்ணெண்ணைக் கப்பல் 07 நாட்கள் தாமதமடையுமாக இருந்தால் நாட்டில் காணப்படுகின்ற ஒட்டுமொத்த விமானங்களுக்கான எரிபொருள் மற்றும் மண்ணெண்ணை முடிவடைந்துவிடும் என்பதாகும். நாட்டில் விமானங்களுக்கான எரிபொருள் மற்றும் மண்ணெண்ணைக்கான வேண்டுதலும் படிப்படியாக அதி-கரித்துவருகின்றமை அவதானிக்கப்பட்டதுடன் அடுத்துவரும் சில ஆண்டுகளுக்கான எதிர்வுகூறலின் பிரகாரமும் அதிகப் படியான அதிகரிப்பு அவதானிக்கப்பட்டது. அதற்கிணங்க தற்பொழுது காணப்படுகின்ற களஞ்சியங்களின் கொள்ளளவை அதி-கரிக்கவில்லையாயின் எதிர்வுகூறப்பட்ட தரவுகளின் அடிப்படையில் 2026 ஆம் ஆண்டளவில் கப்பல் வருகை தருகின்ற சந்தர்ப்பத்தின்போது காணப்படுகின்ற விமானங்களுக்கான எரிபொருள் மற்றும் மண்ணெண்ணைக்கான இருப்பு போதிய-தானது நாட்டின் 10 நாட்கள் தேவைப்பாட்டிற்கு மாத்திரமாகும். இதில் ஆகக்குறைந்த நிலைமையைக் கருத்தில் கொள்கின்றபோது அது போதியதானது நாட்டின் 05 நாட்களுக்கான விமானங்களுக்கான எரிபொருள் மற்றும் மண்ணெண்ணைத் தேவைப்பாட்டிற்கு மாத்திரமாகும். அதாவது ஏதாவது காரணத்தின் அடிப்படையில் விமானங்களுக்கான எரிபொருள் மற்றும் மண்ணெண்ணைக் கப்பல் 05 நாட்கள் தாமதமடையுமாகயிருந்தால் நாட்டில் காணப்படுகின்ற ஒட்டுமொத்தமான விமானங்களுக்கான எரிபொருள் மற்றும் மண்ணெண்ணை முடிவடைந்து விடும் எனவும் அது அதிக ஆபத்தான நிலை எனவும் அவதானிக்கப்பட்டது.

7.1.5 மேலுள்ள தரவுகளுடன் ஒப்பிடும்போது நாட்டில் காணப்படுகின்ற டீசல், பெற்றோல், விமானங்களுக்கான எரிபொருள், மண்ணெண்ணை ஆகிய பிரதான எரிபொருள் உற்பத்திக்காக காணப்படுகின்ற களஞ்சியங்களின் கொள்ளளவு நாட்டின் எரி-பொருள் வேண்டுதலுடன் ஒப்பிடும்போது அதிக ஆபத்தான நிலையில் காணப்படுகின்றது என்பது

அவதானிக்கப்பட்டது.

7.1.6 போக்குவரத்து, தொழிற்சாலைகள், மின்உற்பத்தி மற்றும் ஏனைய அனைத்து துறைகளின் செயற்பாடுகளுக்கு பெற்றோலியம் அத்தியாவசதியமான காரணியாகும். அதற்கிணங்க தொடர்ச்சியான எரிபொருள் வழங்கலில் ஏதாவது இடையூறுகளானது இந்த அனைத்து துறைகளின் இடையூறுகளுக்கு காரணமாக அமையும். அதற்கிணங்க குழாய் முறைமைகளில் இடம்பெறுகின்ற இடையூறு, உரிய சிறந்த தரத்தில் இல்லாமையின் காரணமாக எரிபொருள் கப்பலை நிராகரிப்பதற்கு ஏற்படுகின்றமை அல்லது வேறு ஏதாவது காரணத்தின் அடிப்படையில் எண்ணைக் கப்பல் தாமதமடைதல் மற்றும் போதிய காலத்திற்காக எரிபொருளை களஞ்சியப்படுத்துவதற்கு தேவையான வசதிகள் நாட்டில் இல்லாமையின் காரணமாக நாட்டின் பொருளாதாரச் செயற்பாடுகள் தடைப்படுவதற்கும் மக்களின் வழக்கமான வாழ்க்கையில் இடையூறுகள் ஏற்படுவதற்கும் காரணமாக இருக்கலாம் என்பது அவதானிக்கப்பட்டது. 2017 ஆம் ஆண்டின் போது பெற்றோல் கப்பல் நிராகரிக்கப்பட்டதன் காரணமாக நாட்டின் எரிபொருள் வழங்கலானது செயற்பாடற்றுக் காணப்பட்டது.

7.1.7 தற்பொழுது பாவனையில் காணப்படுகின்ற எண்ணைத் தாங்கிகளுக்கு பொருத்தமான முறையில் பராமரிப்பு நடவடிக்கைகள் செய்யப்பட வேண்டியுள்ளதுடன் சில சந்தர்ப்பங்களில் தொழில்நுட்ப மற்றும் ஏனைய கோளாறுகளின் காரணமாக சில எரிபொருள் தாங்கிகளை பயன்படுத்த முடியாத சந்தர்ப்பங்களும் அவதானிக்கப்பட்டன. அதற்கிணங்க ஏதாவது எரிபொருள் தாங்கிகளை பயன்படுத்த முடியாத நிலை ஏற்படுமாகயிருந்தால் அது ஒட்டுமொத்தமான நாட்டின் எரிபொருள் வழங்கலுக்கு மிகவும் பாதகமான தாக்கத்தை ஏற்படுத்தலாம் என்பது அவதானிக்கப்பட்டது. அவ்வாறே இவ்வாறான சந்தர்ப்பங்களின் போது எண்ணைக் கப்பல் தாமதமடைவதனால் ஏற்படக்கூடிய தாக்கம் மேலும் தீவிரமடையலாம்.

7.1.8 மேலே குறிப்பிட்டுள்ள ஏதாவது பாதகமான நிலைமை அல்லது சர்வதேச ரீதியாக ஏற்படக்கூடிய பாதகமான நிலைமையின் காரணமாக நாட்டில் காணப்படுகின்ற எரிபொருள் வழங்கல் தடைப்படக்கூடிய சந்தர்ப்பங்களின் போது பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்வதற்காக பாதுகாக்கப்பட்ட பூர்த்தியான எரிபொருள் இருப்பு பேணப்படாதிருந்ததுடன் அவ்வாறான நடைமுறை இருக்குமாகவிருந்தால் மேலே 7.1.6 ஆம் பந்தியில் குறிப்பிட்ட எரிபொருள் தட்டுப்பாடு போன்ற சந்தர்ப்பங்கள் குறைவடையும் என்பது அவதானிக்கப்பட்டது.

7.1.9 நாட்டில் தொடர்ச்சியாக மற்றும் மிக இலகுவாக எரிபொருள் வழங்கல் இடம்பெறுவதற்காக முறையான இருப்புக் கட்டுப்பாட்டு நுட்ப முறையினைப் பயன்படுத்துதல் அத்தியாவசதியமானதாகும். இதன்போது முறையான இருப்புக் கட்டுப்பாட்டு நுட்ப முறையினை அமுல்படுத்த வேண்டுமாகயிருந்தால் அதற்கு போதியளவு களஞ்சிய வசதிகள் காணப்பட வேண்டியதுடன் பொருத்தமான கொள்வனவு செய்தல் நடைமுறை பின்பற்றப்படுதல் வேண்டும். எவ்வாறாயினும், போதியளவான மற்றும் முறையான களஞ்சிய முறைமை இல்லாததன் காரணமாக ஒவ்வொரு உற்பத்திகள் தொடர்பாக மீள் கட்டளையிடல் மட்டம், பாதுகாப்பு இருப்பு முதலிய முறையான தீர்மானம் எடுப்பதற்கு முடியாமையும் அதற்கிணங்க நடைமுறைப்படுத்துவதற்கு முடியாமையும் உருவாகியுள்ளமை அவதானிக்கப்பட்டது.

7.1.10 மேலும் போதியளவு எரிபொருள் இருப்பினைக் களஞ்சியப்படுத்துவதற்கு முடியாமையின் அடிப்படையில் பின்வரும் பொருளாதார மற்றும் ஏனைய சிக்கல்கள் பலவற்றிற்கு முகங்கொடுக்க வேண்டி ஏற்படலாம் என்பது அவதானிக்கப்பட்டது.

7.1.10.1 நாட்டில் எரிபொருள் வழங்கலை சுமுகமாகப் பேணுதல், அரசாங்கத்தின் பொறுப்பாகும். அதற்கிணங்க எரிபொருளை போதியளவில் களஞ்சியப்படுத்த முடியாமை மற்றும் ஏதாவது காரணத்தின் அடிப்படையில் எரிபொருள் கப்பல் தாமதமடையுமாகவிருந்தால் அதற்காக அவசர கொள்வனவுகள் மேற்கொள்ளப்படுதல் வேண்டும். அந்த வகையில் அவசர கொள்வனவுகள் மேற்கொள்ளப்படுவதன் காரணமாக மிகவும் சிறந்த உற்பத்திப் பொருட்களைப் பெற்றுக்கொள்வதற்கான இயலுமை மட்டுப்படுத்தப்படுவதுடன் உயர்ந்த கிரயத்திற்கு அந்த உற்பத்திப் பொருட்களை பெற்றுக்கொள்ள வேண்டியும் ஏற்படுகின்றது.

7.1.10.2 சர்வதேச ரீதியாக எரிபொருளைக் கொள்வனவு செய்வதற்காக பல்வேறு முறைமைகள் பயன்படுத்தப்படுகின்றன. அதில் நிலைய கொள்வனவு செய்தல் முறைமை

(Spot Tenders / Single Cargo Tenders) மற்றும் தவணை உடன்படிக்கை முறைமை (Term Tendes) அடிப்படையானவையாகும். தவணை கேள்வி முறைமையின் பிரகாரம் கொள்வனவு செய்யும் போது சர்வதேச எரி-பொருள் வழங்குனர்களுடன் அடுத்துவரும் காலப்பகுதி தொடர்பாக ஏதாவது உறுதியாக இணங்கிக் கொண்ட விலைக்கு அல்லது விலை வீச்சுக்கு மற்றும் ஏனைய நிபந்தனைக்கும் உட்பட்டு எரிபொருளைக் கொள்வனவு செய்வதற்கு உடன்படிக்கை செய்துகொள்ளலாம் என்பதுடன் இது சர்வதேச சந்தை விலை ஏற்றங்களில் பாதகமான தாக்கங்களை குறைத்துக் கொள்வதற்கு காரணமாக இருக்கின்றது என்பது அவதானிக்கப்பட்டது.

(அ) அதற்கிணங்க 2012 மார்ச் 14 ஆந் திகதிய அமப/12/0295/510/003/ரீபீஆர் ஆம் இலக்க அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தினால் அப்போது நடைமுறைப்படுத்தி வந்த நிலைய கொள்வனவு முறைமைக்குப் பதிலாக பின்னர் தீர்த்துவைக்கும் அடிப்படையில் நீண்டகாலத்திற்கு எரிபொருள் உற்பத்திகளை கொள்வனவு செய்யும் வகையில் உடன்படிக்கைகளை மேற்கொள்வதற்கு அமைச்சினால் முயற்சிகள் எடுக்க வேண்டும் எனத் தீர்மானிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், கடந்த சில ஆண்டுகளில் அத்தீர்மானத்திற்கு முரணாக இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தினால் எரி-பொருளை இறக்குமதி செய்யும் போது தவணை உடன்படிக்கை முறைமைக்குப் பதிலாக நிலைய கொள்வனவு முறைமை-யில் இறக்குமதி செய்யப்பட்டிருந்தன.

(ஆ) தவணை உடன்படிக்கை முறைமையினைப் பின்பற்றும் போது மிகவும் சாதகமாக உடன்படிக்கை செய்து கொள்வதாகயிருந்தால் போதியளவு களஞ்சிய முறைமையும் ஏனைய உட்கட்டமைப்பு வசதிகளும் காணப்படுதல் வேண்டும். அதற்கிணங்க தற்பொழுது போதியளவு களஞ்சிய வசதிகள் இல்லாததன் காரணமாக இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் எதிர்காலத்தில் உடன்படிக்கைகளை மேற்கொள்ளும் போது கூட்டுத்தானத்திற்கு மிகவும் சாதகமான நிபந்தனைகளின் கீழ் உடன்படிக்கை செய்து கொள்ள முடியாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

7.1.11 மேலே 7.1.9 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள மட்டுப்பாடுகளின் காரணமாக இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் தவணை உடன்படிக்கைகளை மேற்கொண்டிருந்தமையானது ஒரு தடவையில் தனி ஒரு உற்பத்திப் பொருளை இறக்குமதி செய்வதற்குப் பதிலாக உற்பத்திப் பொருள் கலவையாக இறக்குமதி செய்வதற்காகவாகும். இதில் தவணை உடன்படிக்கைக்காக மிகவும் சாதகமான நிபந்தனைகளின் கீழ் உடன்படிக்கை செய்துகொள்ளக்கூடியதாக இருந்த போதிலும், எரிபொருள் கலவையாக (Parcel முறைமைக்கு) எரிபொருளைக் கொள்வனவு செய்வதற்காக (Term Contract) தவணை உடன்படிக்கைகளை மேற்கொள்வதன் மூலம் அந்த நலன் குறிப்பிடத்தக்க அளவில் வீழ்ச்சியடைந்துள்ளமை அவதானிக்கப்பட்டது.

இதன்போது,

I. சில சந்தர்ப்பங்களில் ஏதாவது நிர்ணயிக்கப்பட்ட எரிபொருள் வகையில் தட்டுப்பாடு காணப்பட்டிருந்தும் அக்கலவையில் (Parcel) காணப்படுகின்ற ஏனைய எரிபொருளில் தட்டுப்பாடு இல்லாததன் காரணமாக தவணை உடன்படிக்கைகளுக்குப் (Term Contract) புறம்பாக கொள்வனவு செய்ய வேண்டி ஏற்பட்டிருந்த சந்தர்ப்பம் அவதானிக்கப்பட்டது.

II. ஒரு கலப்பாக இறக்குமதி செய்வதற்கு உடன்படிக்கை செய்துகொள்ளும் போது ஒரு உற்பத்திப் பொருளை பல தடவைகளில் இறக்குமதி செய்வதற்காக இணங்கிக் கொண்ட அளவுடன் ஒப்பிடுகையில் குறைந்த அளவாக இருந்ததுடன் அதன்போது போட்டிக் கழிவு நலன்களைப் பெற்றுக்கொள்வதற்குள்ள வாய்ப்பு மற்றும் மிகவும் பொருத்தமான வழங்குனர்களைத் தேடிக் கண்டு கொள்வதும் மட்டுப்படுத்தப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

III. இந்த உடன்படிக்கையின் கீழ் இறக்குமதிகள் இடம்பெறுவதாக இருந்தால் ஏதாவது நிர்ணயிக்கப்பட்ட சந்தர்ப்பத்தின் போது கலப்பில் உள்ள அனைத்து எரிபொருள் உற்பத்திகளும் களஞ்சியங்களில் பற்றாக்குறையாக காணப்பட்டிருக்க வேண்டும் அல்லது அவ்வாறு இல்லாத சந்தர்ப்பங்களின் போது உடன்படிக்கையின் பிரகாரம் எவ்வளவு சாதகமாக இருந்த

போதிலும் கட்டளையிட முடியாதிருந்தமை.

IV. ஏதாவது ஒரு எரிபொருள் கலவை-யை இறக்குமதி செய்வதற்குத் தீர்மானிக்கும் போது அக்கலவையின் அனைத்து உற்பத்திகளுக்கும் தேவையான இடவசதிகள் பரிமாற்றம் (Ullage) தயாரிக்கப்பட வேண்டியதுடன் அதற்காக எரிபொருள் தாங்கிகளுக்கிடையே பரிமாற்றம் மற்றும் ஏனைய நடவடிக்கைகள் உயர்வடைவதும் அதனை தரையிறக்கும் நடவடிக்கைகளைத் திட்டமிடலும் மிகவும் சிக்கலானதாக உள்ளது என்பது அவதானிக்கப்பட்டது.

V. இவ்வாறான சந்தர்ப்பங்களின் போது கப்பலிலிருந்து எரிபொருளைத் தரையிறக்கும் போது ஒரே குழாயினைப் பயன்படுத்தி ஒரே தடவையில் தரையிறக்குவதற்கு முடியாதிருந்ததுடன் வெவ்வேறு குழாய்கள் மற்றும் இடங்களுக்கு உரிய கப்பலை மாற்றுவதற்கு (உதாரணமாக கொழும்பு துறைமுகத்திலிருந்து முத்துராஜவெல Single Point Buoy Mooring வரை ஏற்படுவதானல் எரிபொருளைத் தரையிறக்குவதற்காக அதிகளவு காலம் எடுக்கின்றது. அதனால் கப்பல் கட்டணம், தாமதக் கட்டணம் மற்றும் ஏனைய செலவுகளை (டெக் வாடகை) மேலதிகமாக செலவு செய்ய வேண்டி ஏற்படுகின்ற அதேவேளை எரிபொருளை வழங்குவதற்காகவும் குறிப்பிடத்தக்களவு கால தாமதம் இடம்பெறுகின்றமை அவதானிக்கப்பட்டது.

VI. ஒரு கலப்பாக தவணை உடன்படிக்கை செய்கின்ற சந்தர்ப்பத்தில் அந்த உடன்படிக்கையின் பிரகாரம் இறக்குமதி செய்வதாகயிருந்தால் கலப்பின் அனைத்து எரிபொருள் வகைகளும் பற்றாக்குறையாகக் காணப்பட வேண்டிய போதிலும், ஏதாவது பற்றாக்குறையான உற்பத்தியின் வழங்கலை நிறுத்த முடியாதிருக்கும். அக்காரணத்தினால் அந்த உற்பத்திக்காக நிலைய கொள்வனவு இடம்பெறுதலினை தவிர்க்க முடியாது என்பது அவதானிக்கப்பட்டது. அதற்கிணங்க மிகவும் தரமான மற்றும் நிய-ாயமான விலைக்கு எரிபொருளைப் பெற்றுக்கொள்ளும் வாய்ப்பு மட்டுப்படுத்தப்பட்டுள்ளது என்பது அவதானிக்கப்பட்டது.

7.1.12 நாட்டின் ஒட்டுமொத்த எரிபொருள் வழங்கலில் 20 சதவீதத்திற்கு அண்மித்த அளவானவை கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான எரிபொருள் சுத்திகரிப்பு நிலையத்தின் மூலம் உற்பத்தி செய்யப்படுவதுடன் இச்சுத்திகரிப்பு நிலையமும் மிகவும் பழமையானதும் நவீன தொழில்நுட்பங்களைக் கொண்டிருக்காதவை என்பதும் அவதானிக்கப்பட்டது. அக் காரணத்தால் 2018 ஆம் ஆண்டிலிருந்து இன்று வரை இரண்டு சந்தர்ப்பங்களின் போது 56 நாட்கள் சுத்திகரிப்பு நிலையம் மூடப்பட்டிருந்தது. (Shut down) அவசர தேவைப்பாட்டின் காரணமாக அல்லது பராமரிப்பு நடவடிக்கைகளுக்காக குறுகிய மற்றும் நீண்டகாலமாக சுத்திகரிப்பு நிலையம் மூடப்படுகின்ற சந்தர்ப்பத்தில் அந்த எரி-பொருளை பூர்த்தியான இருப்பாக இறக்குமதி செய்வதற்கு ஏற்பட்டிருந்தது. அதற்கிணங்க இறக்குமதி தேவைப்பாடு மற்றும் தவணை எண்ணிக்கைகள் அதி-கரிப்பதுடன் ஒரு தடவையின் போது இறக்குமதி செய்யப்பட்ட அலகுகளின் அளவு மட்டுப்படுத்தப்படுவதன் காரணமாக கப்பல் தாமதமடைவதன் அடிப்படையிலான தாக்கம் மிகவும் தீவிரமடையும்.

7.1.13 தற்பொழுது காணப்படுகின்ற கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான எரிபெ-ாருள் தாங்கி அதன் விளைதிறனான ஆயுட்காலம் படிப்படியாக குறுகிச் செல்வதன் அடிப்படையில் அடுத்துவரும் ஆண்டுகளுக்காக சுமுகமாக பயன்படுத்த முடியும் என்பது சிக்கலுடையதாகும்.

## 7.2 குழாய் முறைமைகள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

7.2.1 இலங்கை பெற்றோலிய களஞ்சிய நிலையக் கம்பனியின் கீழ் நிருவகிக்கப்படுகின்ற கொழும்பு துறைமுகத்திலிருந்து கொலன்னாவை நிலையம் வரை அமைக்கப்பட்ட எரிபொருள் குழாய் வழி முறைமைக்குரிய 5 குழாய் வழிகளில் 2 குழாய்கள் செயற்பாடற்ற நிலையில் காணப்பட்டதன் காரணமாக தற்பொழுது கைவிடப்பட்டுள்ளதுடன் தற்பொழுது பயன்படுத்தி வருகின்ற குழாய்களும் அடிக்கடி கசிவுகளுக்கு உள்ளாகி வருகின்றமை அவதானிக்கப்பட்டது.

7.2.2 பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மற்றும் இலங்கை பெற்றோலிய களஞ்சிய நிலைய கம்பனியால் மேற்கொள்ளப்படுகின்ற பரி-சோதனைகளின் பிரகாரம் பல குழாய்கள் துருப்பிடித்து இருந்தன என்பது உறுதிப்படுத்தப்பட்டது.

7.2.3 நாட்டிலுள்ள அனைத்து வெள்ளை பெற்றோலிய களஞ்சிய வசதிகளில் 43.27

சதவீதம் அளவானவை களஞ்சியப்படுத்தப்படுவது கொலன்னாவை பெற்றோலிய களஞ்சிய நிலையத்தில் என்பதுடன் இறக்குமதி செய்யப்பட்ட வெள்ளை நிறமான எரிபொருளை கொழும்பு துறைமுகத்திலிருந்து கொலன்னாவை நிலையத்திற்கு எடுத்துச்செல்வது இக்குழாய் முறைமைகளினூடாகவாகும். எவ்வாறாயினும், கொழும்பு துறைமுகத்திலிருந்து கொலன்னாவை எரிபெ-ாருள் களஞ்சியத் தொகுதிக்கு சுத்திகரிக்கப்பட்ட வெள்ளை எரிபொருளை (White Oil) எடுத்துச் செல்வதற்காக ஒரு குழாய் வழியின் அடிப்படையில் நிறுத்தி வைப்பதற்கு ஏற்படுவதன் மூலம் அக்குழாய் வழியில் இடையூறுகள் ஏற்படுமாகவிருந்தால் பாரதூரமான எரிபொருள் தட்டுப்பாடு ஏற்பட்டு நாடு முழுவதும் செயற்பாடற்று இருப்பதற்கு வாய்ப்பு உள்ளது என்பது அவதானிக்கப்பட்டது.

7.2.4 கொலன்னாவை நிலையத்தில் களஞ்சியப்படுத்தப்படுகின்ற இறக்குமதி செய்யப்பட்ட அனைத்து வெள்ளை நிற எரி-பொருள் உற்பத்திகளானது டொல்பின் இறங்குதுறையிலிருந்து 10 அங்குல விட்டமுள்ள 75 ஆண்டுகளுக்கு மேல் பழைமை வாய்ந்த இக்குழாய்களினால் எடுத்துச் செல்லப்படுகின்றது. மிகவும் பழைமையானதும் விளைதிறன் ஆயுட்காலத்தை மிகைத்ததுமான இக்குழாயினால் எரி-பொருளை தரையிறக்கும் போது ஆகக்குறைந்த அமுக்கத்தில் தரையிறக்க வேண்டியதன் காரணமாக தரையிறக்கக்டிய உச்ச அளவு வேகம் ஒரு மணித்தியாலத்திற்கு 220 மெற்றிக் தொன் அளவானவையாகும் அதற்கிணங்க 40,000 மெற்றிக் தொன்களை தரையிறக்குவதற்கு 8 நாட்கள் (192 மணித்தியாலங்கள்) அளவில் இருக்கும். பல உற்பத்திப் பொருட்களை ஒரே தடவையில் இறக்குமதி செய்யும் சந்தர்ப்பத்தின் போது மேலதிக செயற்பாட்டு காலத்தையும் உள்ளடக்கி எடுக்கும் காலம் இதனை விட அதிகரிக்கலாம். அதனுடன் ஒப்பிடுகையில் மிகவும் செயற்திறனற்ற நிலைமை என்பது அவதானிக்கப்பட்டது. அதற்கிணங்க நாட்டின் எரிபொருளுக்கான வேண்டுதல் எவ்வளவாக இருந்த போதிலும், ஒரு மாதத்தில் தரையிறக்கக்கூடிய 40,000 மெற்றிக்தொன் கொள்ளளவைக் கொண்ட கப்பல்களின் எண்ணிக்கை 04 இனை விடக் குறைவு என்பது அவதானிக்கப்பட்டது.

7.2.5 அறிக்கையின் மூலம் உள்ளடக்கப்படுகின்ற எரிபொருள் வகைகளில் 43 சதவீதத்திற்கு அண்மித்த அளவானவை முதுராஜவெல நிலையத்தில் களஞ்சியப்படுத்தப்படுகின்றது. அந்நிலையத்திற்கு எரிபொருளை தரையிறக்குதல் இடம்பெறுதலானது Single Point Buoy mooring (SPBM) இனூடாக ஆகும். எவ்வாறாயினும், பாதகமான காலநிலை நிலைமை ஏற்படும் போது SPBM இன் மூலம் எரிபொருளை தரையிறக்குவது பாதுகாப்பற்றதாகும். (கடலில் அமைந்துள்ளது என்பதனால்) அவ்வாறான சந்தர்ப்பங்களின் போது நாட்டுக்கு இறக்குமதி செய்யப்படுகின்ற அனைத்து பெற்றோலியத்தினையும் கொழும்பு துறைமுகத்திலிருந்து கொலன்னாவைக்கு தரையிறக்க வேண்டி ஏற்பட்டிருந்தது. அவ்வாறான சந்தர்ப்பத்தில் ஒரு சிறிய குழாயினால் அனைத்து வெள்ளை பெற்றோலிய இறக்குமதி அளவையும் இக்குழாயில் ஏதாவது இடையூறு நாடு முழுவதிலும் பெற்றோலிய வழங்கலை செயற்பாடற்றதாக்குவதற்கு காரணமாக இருக்கலாம் என்பது அவதானிக்கப்பட்டது.

7.2.6 குழாய்களின் மூலம் எரிபொருளை எடுத்துச் செல்லல் மிகவும் வசதியானதும் பொருளாதார ரீதியாக சாதகமான வழியுமாகும். எவ்வாறாயினும், நிலையங்களுக்கிடையே மாற்றம் செய்வதற்கு தற்பொழுது கொலன்னாவ மற்றும் முத்துராஜவெல பிரதான நிலையங்களுக்கு மத்தியில் குழாய் வழி ஸ்தாபிக்கப்பட்டிருக்கவில்லை. அக்காரணத்தினால் மேலே 7.2.1 மற்றும் 7.2.3 ஆம் பந்திகளில் குறிப்பிட்ட சந்தர்ப்பங்களின் போது முத்துராஜவெல களங்சிய முறைமையை பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ள முடியாததுடன் அவை நாட்டின் பெற்றோலியத்தை தொடர்ச்சியாக வழங்குவதற்கு முக்கியமான காரணியாக அமையலாம் என்பது அவதானிக்கப்பட்டது.

7.2.7 குழாய் முறைமையில் பெரும்பாலும் இடம்பெறுகின்ற தடங்கல்கள், தொடர்ச்சியான எண்ணெக் கசிவுகள் முதல-ியவற்றின் மூலம் எரிபொருள் வீணாக்கப்படுதல் மற்றும் சேதமாக்கப்படுதலின் காரணமாக கடந்த சில ஆண்டுகளில் குறிப்பிடத்தக்க அளவான நிதி நட்டம் ஏற்பட்டுள்ளது என்பது அவதானிக்கப்பட்டது. மேலும், இதன்மூலம் இயற்கைச் சுற்றாடலுக்கும் குறிப்பிடத்தக்க அளவான பாதிப்புக்கள் ஏற்பட்டுள்ளன எனவும் அதற்காக பல சந்தர்ப்பங்களில்

இழப்பீடுகள் செலுத்தப்பட்டுள்ளன எனவும் அவதானிக்கப்பட்டது.

7.2.8 பிரதான இரண்டு நிலையங்களுக்கிடையே எரிபொருளை பரிமாற்றம் செய்வதற்கு குழ-ாய் முறைமை ஸ்தாபிக்கப்பட்டிருக்காமையின் காரணமாக அந்நிலையங்களில் களஞ்சியங்களை மிகவும் ஆக்கபூர்வமாகப் பயன்படுத்துவதற்கான வாய்ப்பு மட்டுப்படுத்தப்பட்டுள்ளமை அவதானிக்கப்பட்டது.

7.2.9 40,000 மெட்ரிக் தொன் கொள்ளளவுள்ள பெற்றோலியக் கப்பலை தரையிறக்குவதற்கு உரிய கப்பல் கம்பனியுடன் இணங்கிக் கொண்ட காலப்பகுதி 96 மணித்தியாலங்களாக இருந்த போதிலும் குழாய் முறைமையில் காணப்படுகின்ற பலவீனங்களின் காரணமாக தற்பொழுது கப்பல்களிலிருந்து பெற்றோலியத்தை தரையிறக்கும் காலப்பகுதி 120 – 168 மணித்தியாலங்கள் என்பது அவதானிக்கப்பட்டது. இதன் காரணமாக இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கு அதற்காக தாமதக் கட்டணம் (Demurrages) செலுத்த வேண்டி ஏற்பட்டிருந்தது என்பது அவதானிக்கப்பட்டது. கடந்த ஐந்து ஆண்டுகள் தொடர்பான தாமதக் கட்டணம் ரூபா 488 மில்லியனாக இருந்தது.

